| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திருமதி.க.சசிகலா, | 1. இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி |
| அரசுத் தேர்வுகள் இயக்குநர், | 2. முதன்மைக் கல்வி அலுவலர்கள், அனைத்து |
| அரசுத் தேர்வுகள் இயக்ககம், | மாவட்டங்கள் |
| சென்னை - 600 006. | . |

**ந.க.எண். 018677 / எச்1 / 2026** **நாள்: 08 .05.2026**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை-6 - 2025-2026 ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை பொதுத் தேர்வு – மதிப்பெண் பட்டியலை (Statement of Marks) மாணவர்களுக்கு விநியோகித்தல் – தொடர்பாக.

**பார்வை:** இவ்வலுவலக செய்திக் குறிப்பு, நாள்.08.05.2026.

*****

08.05.2026 அன்று மேல்நிலை பொதுத் தேர்வுக்கான முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து 13.05.2026 **அன்று காலை 11.00 மணி** முதல் www.dge.tn.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து அனைத்து மேல்நிலை பள்ளித் தலைமையாசிரியர்கள் தங்கள் பள்ளிகளுக்கென வழங்கப்பட்ட USER ID, PASSWORD-ஐக் கொண்டு தங்கள் பள்ளி மாணவர்களுக்கு உரிய மதிப்பெண் பட்டியலை (Statement of Marks) பதிவிறக்கம் செய்து, அச்சான்றிதழ்களில் உள்ள விவரங்களைச் சரிபார்த்து, தலைமையாசிரியரின் கையொப்பம் மற்றும் பள்ளி முத்திரையிட்டு 13.05.2026 அன்று முதலே மாணவர்களுக்கு வழங்கலாம் அல்லது மாணவர்கள் தங்களது பிறந்த தேதி, பதிவெண் ஆகிய விவரங்களை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் உள்ளீடு செய்து தாங்களே பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

தனித்தேர்வர்கள் தங்களது பிறந்த தேதி, பதிவெண் ஆகிய விவரங்களை அளித்து www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில், உரிய மதிப்பெண் பட்டியலை (Statement of Marks) தாங்களே பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

கூடுதல் அறிவுரைகள்:-

1. பள்ளித் தலைமை ஆசிரியர்கள் பதிவிறக்கம் செய்யப்படும் மதிப்பெண் பட்டியல்களை (Statement of Marks) சரிபார்த்து, அவற்றில் மாணவர் பெயர், பிறந்த தேதி, தலைப்பெழுத்து, புகைப்படம், பயிற்று மொழி ஆகியவற்றில் ஏதேனும் பிழைகள் இருப்பின், தலைமையாசிரியரே அத்திருத்தத்தை மேற்கொண்டு தயார் நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும். அவற்றை சான்றொப்பமிட்டு மாணவர்களுக்கு அளித்திட வேண்டும்.

2. தற்காலிக மதிப்பெண் பட்டியலில் திருத்தங்கள் செய்து வழங்கப்பட்ட மாணவர்களுக்கு, பிழைகளற்ற மதிப்பெண் சான்றிதழ்கள் அச்சமுத்தம் செய்து வழங்க ஏதுவாக, அத்திருத்தங்களை பின்னர் இவ்வியக்கத்தால் அறிவிக்கப்படும் நாளன்று ஆன்லைனில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

3. தேர்வர்களுக்கு மாற்றுச் சான்றிதழ் வழங்கும் போது மாற்றுச் சான்றிதழில் பன்னிரெண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வு மதிப்பெண் சான்றிதழ் வரிசை எண்ணை எழுதும் கலத்தில் "Refer Original Certificate" என்று குறிப்பிட்டு தேர்வர்களுக்கு வழங்குமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

4. அசல்மதிப்பெண் சான்றிதழ்கள் அச்சமுத்தம் செய்து பெறப்பட்ட பின்னர், சம்பந்தப்பட்ட தேர்வருக்கான பள்ளியின் வசமுள்ள மாற்றுச் சான்றிதழ் பதிவேட்டின் Counter Foil-ல் சம்பந்தப்பட்ட தேர்வரது பன்னிரெண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வு மதிப்பெண் சான்றிதழின் வரிசை எண்ணை, பதிவு செய்து கொள்ள வேண்டும். மேற்படி Counter Foil-ல் மேற்கொள்ளப்படும் பதிவுகள் நிரந்தரமாக பின்வரும் காலத்தில் சரிபார்த்தலுக்காகப் பயன்படுத்தக்கூடிய வகையில் பராமரிக்கப்பட வேண்டும்.

மேற்காண் அறிவுரைகளை இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி மற்றும் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் தங்களது ஆளுகைக்குட்பட்ட சார்ந்து மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் அறிவுறுத்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/-

இயக்குநர்

**<u>நகல்:</u>**

1. மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநில திட்ட இயக்ககம், சென்னை-6.
2. உறுப்பினர் செயலர், அரசு மாதிரிப் பள்ளிகள், சென்னை-6.
3. இயக்குநர், பள்ளிக்கல்வி இயக்ககம், சென்னை-6.
4. இயக்குநர், தனியார் பள்ளிகள் இயக்ககம், சென்னை-6.
5. அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள், அனைத்து மாவட்டங்கள்.
6. . மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை மற்றும் தனியார் பள்ளிகள்), அனைத்து மாவட்டங்கள்.
7. எச்4-பிரிவு (அலுவலகம்)